தேதி 31.10.2025 நேரம் மாலை 6.10 மணி

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

தலைப்புச் செய்திகள்

முன்னேறிய இந்தியா என்னும் கனவை நிறைவேற்றுவதில், நாட்டு மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் தங்களை மறு அர்ப்பணிப்பு செய்து கொள்ள வேண்டும் என பிரதமர் திரு.நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

மதம், மொழி, இனம் உள்ளிட்ட எல்லா பாகுபாடுகளுக்கும் அப்பாற்பட்ட வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பில், தமது அரசு முக்கிய சாதனைகளை எட்டியிருப்பதாகவும், பிரதமர் திரு.நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சர்தார் வல்லபாய் படேலின் 150ஆவது பிறந்த நாள் இன்று புதுச்சேரி உட்பட நாடு முழுவதும், தேசிய ஒற்றுமை தினமாக கொண்டாடப்பட்டது.

புதுச்சேரி விடுதலை திருநாள் நாளை கொண்டாடப்படுவதை முன்னிட்டு புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி, மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மோடி ஒற்றுமை -1 (18 )

முன்னேறிய இந்தியா என்னும் கனவை நிறைவேற்றும் வகையில், நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு, தேச முன்னேற்றப் பணிகளுக்கு தங்களை மறு அர்ப்பணிப்பு செய்து கொள்ள வேண்டும் என பிரதமர் திரு.நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார். சர்தார் வல்லபாய் படேலின் 150ஆவது பிறந்த நாளை ஒட்டி குஜராத் மாநில் ஏக்தா நகரில் இன்று நடைபெற்ற தேசிய ஒற்றுமை தின விழாவில் பெரும் எண்ணிக்கையிலான மக்களிடையே உரையாற்றிய அவர், தேசிய ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கான ஒட்டுமொத்த மன உறுதியை வெளிப்படுத்தும் வகையில் நாடு முழுவதும் இன்று கோடிக்கணக்கிலான மக்கள் ஒற்றுமைக்கான உறுதி மொழி ஏற்பதைச் சுட்டிக்காட்டினார். தேச ஒற்றுமையின் கட்டுக் கோப்பை குலைக்கும் வகையிலான எந்தவொரு எண்ணத்தையும், செயலையும் மக்கள் முழுமையாக புறக்கணிக்க வேண்டும் என்றும், இதுவே தற்போது காலத்தின் தேவை என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தினார். விடுதலையின் போது 550 சமஸ்தானங்களாக சிதறிக் கிடந்த இந்தியாவை ஒரே நாடாக ஒருங்கிணைக்கும் அசாத்தியமான சாதனையை சர்தார் படேல் சாதித்ததை பிரதமர் சுட்டிக்காட்டி, ஒரே பாரதம்-உன்னத பாரதம் என்பதற்கு இதுவே சிறந்த சான்றாகும் என்றார்.

மோடி ஒற்றுமை -2 (13 )

மதம், மொழி, இனம் உள்ளிட்ட எல்லா பாகுபாடுகளுக்கும் அப்பாற்பட்ட வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பில் அரசின் சாதனைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி பட்டியலிட்டுக் காட்டினார். கடந்த 10 ஆண்டுகளில் நாட்டில் 25 கோடி பேர் வறுமையிலிருந்து மீட்கப் பட்டுள்ளதாகவும், உள்கட்டமைப்பு மேம்பாடு, வெளிப்படையான நிர்வாகம், மற்றும் ஊழலற்ற கொள்கைகளால், மக்களின் மனங்களை அரசு ஒருங்கிணைத்து இருப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

2014ஆம் ஆண்டு முதல் தமது அரசு, மாவோயிச தீவிரவாதத்திற்கு எதிராக வலுவான, உறுதியான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார். 2014ஆம் ஆண்டிற்கு முன்னர், நாட்டில், சுமார் 100 மாவட்டங்கள் மாவோயிச செயல்பாடுகளால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது இந்த எண்ணிக்கை வெறும் 7ஆக குறைக்கப் பட்டுள்ளதாக, அவர் கூறினார். ஏக்தா நகர் ஒற்றுமை விழா குறித்து, கூடுதல் விவரங்கள்….

(வாய்ஸ்)

மோடி ஒற்றுமை -3 (17 )

(வாய்ஸ்)

ஏக்தா நகரிலுள்ள சர்தார் படேலின் பிரமாண்டமான ஒற்றுமை சிலைக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி மலர்தூவி மரியாதை செலுத்தினார். விழாவில் கூடியிருந்த அனைவருக்கும் அவர் தேசிய ஒற்றுமை தின உறுதிமொழி செய்து வைத்தார். தொடர்ந்து, பெரிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய ஒற்றுமை தின அணிவகுப்பை, பிரதமர் பார்வையிட்டார். எல்லை பாதுகாப்பு படை, மத்திய ரிசர்வ் போலீஸ் படை மற்றும் பல்வேறு மாநிலங்களின் காவல் துறையினர், இந்த அணிவகுப்பில் பங்கேற்றனர். பல்வேறு மாநில அரசுகள் மற்றும் மத்திய ஏஜன்சிகள் சார்பில் வேற்றுமையில் ஒற்றுமை என்பதை குறிக்கும் வகையிலான அலங்கார வண்டிகளும், அணிவகுப்பில் இடம்பெற்றன. முற்றிலும் இந்திய நாய் ரகங்களைக் கொண்டு எல்லைப் பாதுகாப்பு படையினரால் உருவாக்கப்பட்டுள்ள மோப்ப நாய்களின் அணிவகுப்பும் முக்கிய அம்சமாக இடம் பெற்றது. **அரசு நிர்வாகத்தை மறு கற்பனை செய்தல்** என்ற கருப்பொருள் அடிப்படையிலான 7ஆம் கட்ட **ஆரம்ப்** திட்டத்தின் கீழ், 100ஆவது தொகுப்பாக அடிப்படைப் பயிற்சி முடித்த

பயிற்சி அதிகாரிகளுடன், பிரதமர் திரு. நரேந்திர மோடி பின்னர் கலந்துரையாடல் நடத்தினார்.

புதுச்சேரி படேல் - (16 )

சர்தார் படேல் பிறந்த நாள் இன்று புதுச்சேரியில் தேசிய ஒற்றுமை தினமாக அரசு சார்பில் கொண்டாடப்பட்டது. கடற்கரைச் சாலை காந்தி சிலை அருகே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த சர்தார் படேலின் திருவுருவப் படத்திற்கு, துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு.ஆர்.செல்வம், மாநில உள்துறை அமைச்சர் திரு. நமசிவாயம், சட்டமன்ற உறுப்பினர் திரு. சாய் சரவணன் குமார், தலைமைச் செயலர் திரு. சரத் சௌஹான், காவல்துறை ஐ.ஜி டாக்டர் அஜித்குமார் சிங்லா உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். தொடர்ந்து காவல்துறை மற்றும் என்.சி.சி. – என்.எஸ்.எஸ். மாணவ, மாணவிகளின் அணிவகுப்பு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் தேசிய ஒற்றுமை தின உறுதிமொழியை வாசிக்க, அனைவரும் அதை ஏற்றுக்கொண்டனர். பின்னர் பல்வேறு கலைக் குழுவினரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிறைவாக மாணவ-

மாணவியரின் தேசிய ஒற்றுமை தின ஓட்டத்தை, துணைநிலை ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர் கொடியசைத்து தொடக்கி வைத்தனர்.

காரைக்கால் படேல் - (8 )

காரைக்காலில் மாவட்ட நிர்வாகம் சார்பில் சர்தார் படேல் 150ஆவது பிறந்த நாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. காரைக்கால் கடற்கரைச் சாலையில், அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அன்னாரின் திருவுருவப் படத்திற்கு, புதுச்சேரி குடிமைப்பொருள் வழங்கு துறை அமைச்சர் திரு. பிஆர்என் திருமுருகன், மாவட்ட ஆட்சியர் திரு.ரவிபிரகாஷ் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். விழாவில் காவல்துறையினரின் அணிவகுப்பு இடம்பெற்றது. தேசிய ஒருமைப்பாட்டு தின உறுதிமொழியும் ஏற்கப்பட்டது.

ஏனாம் - படேல் - (8 )

ஏனாமில், GMC பாலயோகி விளையாட்டு அரங்கில் இன்று காலை நடைபெற்ற சர்தார் படேலின் 150ஆவது பிறந்த நாள் விழாவில் மண்டல நிர்வாக அதிகாரி திரு. அங்கித் குமார், நிகழ்ச்சியில் கலந்து கொண்ட

அனைவருக்கும் தேசிய ஒற்றுமை தின உறுதிமொழி செய்து வைத்தார். காவல் உள்ளிட்ட பல்வேறு அரசு துறைகளின் அதிகாரிகளும், மாணவ, மாணவிகளும் இதில் கலந்து கொண்டனர். தொடர்ந்து தேசிய ஒற்றுமை தின ஓட்டத்தையும், மண்டல நிர்வாக அதிகாரி திரு. அங்கித் குமார் கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

விடுதலை திருநாள் ( 13 )

புதுச்சேரி விடுதலை திருநாள் நாளை கொண்டாடப்படுவதை முன்னிட்டு புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி, மாநில மக்கள் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்துள்ளார். விடுதலைக்காக நம் முன்னோர்கள் செய்த தியாகத்தை பெருமையோடு நினைவுகூரும் நாள் இது என்றும், இன்றைய இளம் தலைமுறையினர் விடுதலை உணர்வை மனதில் கொண்டு மாநிலத்தின் ஒற்றுமை, வளர்ச்சி மற்றும் நலனுக்கு செயல்படுதல் அவசியம் என்றும் அவர் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார். விடுதலைக்குப் பிந்தைய 70 ஆண்டுகள், கல்வி, சுகாதாரம், சுற்றுலா, விவசாயம், தகவல் தொழிலநுட்பம் உள்ளிட்ட எல்லா துறைகளிலும் வளர்ச்சிப் பாதையில் முன்னேறி வருவதாகவும், மக்கள் நலனே முதன்மை நோக்கமாக கொண்டு தமது அரசு மேற்கொண்டு வரும் வளர்ச்சிப் பணிகளால், முன்னோடி மாநிலமாக புதுச்சேரி திகழ்வதாகவும், முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி இந்திரா - (12 )

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி நினைவுநாள் இன்று புதுச்சேரியில் தேசிய மறு அர்ப்பணிப்பு தினமாக அரசு சார்பில் அனுசரிக்கப்பட்டது. விழுப்புரம் சாலை- 100 அடி சாலை சந்திப்பில் உள்ள இந்திரா காந்தியின் திருவுருவப் படத்திற்கு, துணைநிலை ஆளுநர் திரு.கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, அரசு கொறடா திரு.ஏ.கே.டி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் திரு. சாய் சரவணன் குமார், தலைமைச் செயலர் திரு. சரத் சௌஹான், காவல்துறை ஐ.ஜி டாக்டர் அஜித்குமார் சிங்லா உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியின் போது அனைத்து மத பிரார்த்தனையும், பாரதியார் பல்கலைக் கூட பேராசிரியர்கள் மற்றும் மாணவிகளின் தேசபக்தி பாடல்களும் இடம் பெற்றன. இதனைத் தொடர்ந்து 2 நிமிட மௌனம் அனுசரிக்கப்பட்டது.

ஜிஎஸ்டி -மகாராஷ்டிரா -1 (5)

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த செப்டம்பர் 22-ஆம் தேதி முதல் அமலாகி வரும் ஜிஎஸ்டி சேமிப்பு உற்சவம், சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், மகாராஷ்டிரா

மாநிலத்தில்  பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெறுகிறது என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு…..

(வாய்ஸ்)

ஜிஎஸ்டி – மகாராஷ்டிரா 2 (18)

(வாய்ஸ்)

புதிய தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் கீழ் மகாராஷ்டிரா மாநிலத்தில் வேளாண்மை, தொழில் மற்றும் சேவைத் துறையில் முக்கிய பலன்கள் ஏற்பட்டுள்ளன. சர்க்கரை, பழக்கூழ் மற்றும் பழரசம் மீதான ஜிஎஸ்டி 12-லிருந்து 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால் இத்தகைய பொருட்களின் நுகர்வு அதிகரித்து, வேளாண் பதனீட்டுத் துறையில் மதிப்புக் கூடுதல் பணிகள் ஊக்கம் பெற்றுள்ளன. இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் வலுப்பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. 2 ஆயிரத்து 500 ரூபாய் வரை விலையுள்ள காலணிகள் மீதான ஜிஎஸ்டி 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், மகாராஷ்டிர மாநிலத்தின் புகழ்பெற்ற கோலாப்புரி காலணிகளின் விற்பனையும் ஏற்றுமதி வாய்ப்புகளும் அதிகரித்துள்ளன. திரைப்பட தயாரிப்பு மற்றும் கேளிக்கைத் துறைக்கு பெயர் பெற்ற மகாராஷ்டிர மாநிலத்தில், 100 ரூபாய் வரையுள்ள சினிமா டிக்கெட்டுகள் மீதான ஜிஎஸ்டி 12-லிருந்து 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், திரைப்பட ரசிகர்கள் முதல், தயாரிப்பாளர்கள் வரை அனைவரும்

உற்சாகமடைந்துள்ளனர். புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால் மகாராஷ்டிரா உள்ளிட்ட எல்லா மாநிலங்களிலும் மக்கள் மீதான வரிச்சுமையும் குறைந்து, பல்வேறு துறைகளில் போட்டித் திறன் அதிகரிக்கும என்பதில் ஐயமில்லை.

புதுச்சேரி செயலி (13 )

புதுச்சேரியில் ஸ்மார்ட் நகரத் திட்டத்தின் கீழ் அண்மையில் வெளியிடப்பட்ட நம்ம ஊரு டாக்ஸி மொபைல் செயலியை இ-ரிக்ஷா மற்றும் ஆட்டோ ஓட்டுநர்களும், பொதுமக்களும் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என போக்குவரத்து துறை கேட்டுக்கொண்டுள்ளது. ஆட்டோ ஓட்டுநர்கள், பொதுமக்கள் ஆகிய இரு தரப்பினரையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்த மொபைல் செயலி மூலம், பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிளுக்கு நியாயமான கட்டணத்தில், நம்பிக்கையான பயண வசதி கிடைக்கவும், ரிக்ஷா ஓட்டுநர்களுக்கு வாழ்வாதாரம் மேம்படவும், ஏதுவாகும் என்று போக்குவரத்து துறை, செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது. எதிர்கால தேவைகளுக்கு ஏற்ற, தூய, பாதுகாப்பான நகரமாக புதுச்சேரியை மேம்படுத்தவும், இந்த செயலி உதவிகரமாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வானிலை (9 )

மத்திய கிழக்கு வங்க கடல் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கிழக்கு திசைக் காற்றின் வேகமாறுபாடு காரணமாக, தமிழ்நாடு, புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான மழைக்கு வாய்ப்புள்ள போதிலும், நவம்பர் 2ஆம் தேதி வரை பொதுவாக வறண்ட வானிலையே நிலவும் என்றும், 3ஆம் தேதிக்கு மேல் 6ஆம் தேதி வரை மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆடவர் கிரிக்கெட் (7)

அசாருதீன் ( 7)

முன்னாள் கிரிக்கெட் வீரரும், மூத்த காங்கிரஸ் தலைவருமான முகமது அசாருதீன் தெலங்கான மாநில அமைச்சராக இன்று பதவியேற்றுள்ளார். ஐதராபாத் ராஜ்பவனில் நடைபெற்ற விழாவில் தெலங்கானா ஆளுநர் திரு. ஜிஷ்ணு தேவ் வர்மா, அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இதையும் சேர்த்து முதலமைச்சர் திரு.ரேவந்த் ரெட்டி தலைமையிலான தெலங்கான அமைச்சரவையில், அமைச்சர்களின் எண்ணிக்கை 16ஆக அதிகரித்துள்ளது.

ராணுவ தளபதி (9 )

உலகில் பழைய போர் முறைகள் மாறி, தற்போது போர் என்பது, பயங்கரவாதம், நிழல் யுத்தம், **தகவல் தாக்குதல்** போன்ற பல பிரிவுகளாக விரிவடைந்து இருப்பதால், இனி தேசிய பாதுகாப்பையும், தேசக் கட்டுமானத்தையும் தனித்தனியே பிரித்துப் பார்க்க இயலாது என்று, தலைமை ராணுவத் தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி கூறியுள்ளார். இதை நன்கு அறிந்தவாகள் நவீன தலைமுறையின் இளைஞர்கள்தான் என்பதால் தேசிய பாதுகாப்பில் இளைஞர்களின் அதிகார பங்கேற்பு அவசியம் என்று அவர் இன்று புதுடெல்லியில் இளம் தலைவர்கள் மாநாடு ஒன்றில், பேசுகையில் கூறினார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

முன்னேறிய இந்தியா என்னும் கனவை நிறைவேற்றுவதில், நாட்டு மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் தங்களை மறு அர்ப்பணிப்பு செய்து கொள்ள வேண்டும் என பிரதமர் திரு.நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

மதம், மொழி, இனம் உள்ளிட்ட எல்லா பாகுபாடுகளுக்கும் அப்பாற்பட்ட வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பில், தமது அரசு முக்கிய சாதனைகளை எட்டியிருப்பதாகவும், பிரதமர் திரு.நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சர்தார் வல்லபாய் படேலின் 150ஆவது பிறந்த நாள் இன்று புதுச்சேரி உட்பட நாடு முழுவதும், தேசிய ஒற்றுமை தினமாக கொண்டாடப்பட்டது.

புதுச்சேரி விடுதலை திருநாள் நாளை கொண்டாடப்படுவதை முன்னிட்டு புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி, மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.